**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI.**
**(CHAPTER XXIII CODE OF THE CRIMINAL PROCEDURE)**

**C.C. No:258/2025 C/W 309/2025**

**Dated: 02.07.2026**

**Deposition of Witnesses for PW - 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | **திரு.கார்த்திக்செல்வம்** | வயது | : | |
| தகப்பனார் பெயர் | : | | தாலுகா | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed by Thiru.Vinothkumar, Translator of this court in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023.

**எதிரி ஆஜர் செய்யப்பட்டார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

எதிரி தரப்பு **வழக்கறிஞர் ஆஜர்.**

**As per the circular of the Hon'ble High Court,Madras in ROC.NO.74663/2024/F1-dt.21.02.2025 the identity of the witness verified with their identity card.**

**Aathar card of the Witness verified.**

(சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் சாட்சி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் அரசு பதிவிதழ் பெற்ற அதிகாரி இல்லை என்றால் சரிதான். அசாஆ.13 பிரிவு 57-ன்படியான அறிக்கையில் எனக்கு தகவல் வாட்சப் மூலம் அனுப்பப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். வாட்சப் மூலம் என்னால் பெறப்பட்ட தகவலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வாட்சப் தகவல் எந்த போன் நம்பரில் பெறப்பட்டது என்றால் எனது வாட்சப்பில் பெறப்பட்டது. வாட்சப் நம்பரை நீதிமன்றத்தில் குறிப்பிட முடியுமா என்றால் முடியும். எனது வாட்சப் செல்போன் எண் என்னவென்றால்

8754041110. நான் இவ்வழக்கில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் எதுவும் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக NCB வழக்குகளில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் வழக்கமாக தயார் செய்வது இல்லை. அதசாஆ.13-ல், " At around 20/45 hours. a Toyota Camry Vehicle bearing the same registration number TN 51BA0007 as given in the secret information was found Near the direction of Pudukkottai to Madurai Road and the vehicle parked on the left side of road." என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.மேலும் அதசாஆ.13-ல், "Further documents and things were recovered from vehicle was also seized" என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதசாஆ.3-ன்படி alleged time of seizure Mahazar 21.00 hours என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் எந்த வாரண்டும் Authorization எதுவும் நீதித்துறை நடுவரிடமிருந்து u/s 41, 42-ன்படி பெறவில்லை என்றால் சரிதான். நான் Sec 42 NDPS Act Proviso-ன்படி எந்த reason to believe record செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். NDPS சட்ட பிரிவுகள் 41, 42 பின்பற்றப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.13-ல் செல்போன்கள் எதுவும் கைப்பற்றப்பட்டதாக நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதசாஆ.13-ல் எதிரி அலெக்சை எங்கு வைத்து கைது செய்தேன் என்று விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரி அலெக்சை விசாரணைக்காக எங்கு வர சம்மன் அழைத்தேன் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். NDPS சட்ட பிரிவு 57ன்படியான அறிக்கை குற்ற பத்திரிக்கையுடன் நீதிமன்றத்திற்கு வரப்பட்டது என்றால் சரியல்ல. NDPS சட்ட பிரிவு 57ன்படியான அறிக்கை உடனடியாக நீதிமன்றத்திற்கு அனுப்பியதற்கான ஆவணம் எதுவும் இல்லை

என்றால் சரியல்ல. NDPS சட்ட பிரிவு 57ன்படியான அறிக்கையில் பறிமுதல் மற்றும் கைதிற்கான முழுமையான அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் 57ன்படியான அறிக்கை முழுமை அடையவில்லை என்று சொன்னால் சரியல்ல. அசாஆ.13, NDPS சட்ட பிரிவு 57ன்படியான அறிக்கையை முழுமையாக படித்து பார்த்து தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். அசாஆ.13-ல் " On 13.04.2025 at around 20.00 hours, I received information report ...... " என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் புதுகோட்டை நகர காவல் நிலையத்திற்குட்பட்டது என்றும் 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் கணேஷ் நகர் காவல் நிலையத்திற்கு 3 கி.மீட்டருக்கு அருகில் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அதசாஆ.3 மகஜரில் NCB டீம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் யார்யார் உறுப்பினர்களாக இடம் பெற்றிருந்தார்கள் என்று சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். அதில் நானும் மற்றொரு சார்பு ஆய்வாளர் திரு.அருண்குமார், திரு.மோகன்ராஜ், சிப்பாய், திரு.துரைபாண்டி சிப்பாய், திரு.ஸ்டாலின் சிப்பாய் திரு.சீதாராமன் சிப்பாய் ஆகும். நான் கூறியுள்ள அனைத்து அலுவலர்களும் எங்கு வேலை பார்த்தார்கள் என்றால் திரு.சீதாராமன் சிப்பாய் NCB சென்னை அலுவலர் ஆவார். மற்ற நாங்கள் அனைவரும் மதுரையில் வேலை பார்ப்பவர்கள் ஆகும். 13.04.2025-ம் தேதி என்னுடன் என்னுடைய மேற்சொன்ன டீம் உறுப்பினர்கள் அனைவரும் புதுக்கோட்டை வந்துவிட்டார்களா என்றால் சீதாராமனை தவிர மற்ற நாங்கள் அனைவரும் புதுக்கோட்டைக்கு வந்தோம். நாங்கள் புதுக்கோட்டைக்கு எந்த வாகனத்தில்

வந்தோம் என்றால் வாடகை காரில் வந்தோம். அந்த வண்டியின் பிராண்டு தெரியுமா என்றால் அது ஒரு SUV ஆகும். அது ஒரு Private vehicle என்றால் சரிதான். அந்த வாகனத்தின் சொந்தகாரரர் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் அது தற்போது ஞாபகம் இல்லை. மேற்படி வாகனத்தை யார் ஓட்டினார்கள் என்றால் டிரைவர் பெயர் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மதுரையிலிருந்து புதுக்கோட்டைக்கு வந்து சேர்வதற்கு சுமார் எவ்வளவு நேரம் என்றால் 2, 2-1/2 மணி ஆகும். நான் புதுக்கோட்டை கவிநாடு கிழக்கு வட்டம் மேலவிளாகுடி VAO திருமதி.மாரிக்கண்ணு மற்றும் Village Assistant திரு.ரவி என்பவர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு என்னுடன் வந்தார்கள் என்றால் சரிதான். மேற்படி நபர்கள் எந்த வாகனத்தில் வந்தார்கள் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எனது முதல் விசாரணையில் 13.04.2025-ம் தேதி 20.00 மணிக்கு மேலவிளாக்குடி ஆட்டங்குடி, கவிநாடு கிழக்கு வட்டம் VAO திருமதி.மாரிக்கண்ணு கிராம உதவியாளர் திரு.ரவி ஆகியோர்களை போனில் தொடர்பு கொண்டேன் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் என்னுடைய போனில் தொடர்பு கொண்டேன் என்று கூறிவில்லை. 13.04.2025-ம் தேதி 20.00 மணிக்கு முன்பு நான் புதுக்கோட்டை வந்தடைந்தேன். 13.04.2025-ம் தேதி நான் இந்த சம்பவம் குறித்த ரகசிய தகவல் பெற்ற பின்பு தான் மதுரையிலிருந்து புதுக்கோட்டை வந்தடைந்தேன் என்று கூறியுள்ளேன் என்று சொன்னால் சரிதான். அதசாஆ.13ல் 13.04.2025-ம் தேதி 8.00 மணிக்கு நான் தகவல் பெற்றேன் என்று கூறியுள்ளேன் என்றும் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் 13.04.2025-ம் தேதி 8.00 மணிக்கு நான் புதுக்கோட்டை வந்துவிட்டேன் என்றும் கூறியுள்ளேன் என்பதால் தகவல் வந்ததாக சொல்வது உண்மை இல்லை என்றும்

இது ஒரு பொய் வழக்கு என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.4 சம்மனில் எதிரியை எங்கு வர சம்மன் அனுப்பியுள்ளேன் என்றால் அறை எண்.201, ஹோட்டல் சிவாலயா, புதுக்கோட்டை என்ற முகவரிக்கு விசாரணைக்காக வரச் சொன்னேன். ஹோட்டல் சிவாலயா என்பது தனியார் ஹோட்டல் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் எதிரியை ஹோட்டல் சிவாலயாக்கு வர சொன்னதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதசாஆ.13-ல் எதிரியை ஹோட்டல் சிவாலயாக்கு வரச் சொன்னதாக கூறவில்லை என்று சொன்னால் சரிதான். ஹோட்டல் சிவாலயாவில் எத்தனை அறைகள் இருந்தது என்று சொல்ல முடியுமா என்றால் அதை நான் தற்போது ஞாபகம் இல்லை என்பதால் சொல்ல இயலாது. நான் விசாரணைக்காக செலவழிக்கும் பணத்தை எனது அலுவகத்திலிருந்து பெற்று கொள்ள முடியும் என்றால் சரியல்ல. Case Investigation-க்கான செலவிடும் தொகையை கிளைம் செய்ய முடியாது. ஆனால் தடய சொத்தினை கைப்பற்றுவது தொடர்பான செலவினங்களை எங்கள் அலுவலகத்தில் கிளைம் செய்து கொள்ளலாம். ஹோட்டல் சிவாலயா அறை எண்.201, 13.04.2025-ம் தேதி பில் அல்லது வாடகை ரசீதை நான் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. ஹோட்டல் சிவாலயா ரூம் எடுத்து தங்கியதற்கு உண்டான அறை வாடகையை எனது சொந்த பணத்திலிருந்து செலவழித்தேன் என்றால் சரிதான். ஹோட்டல் சிவாலயா நான் தங்கிய போது எனது டீம் உறுப்பினர்களும் அதே அறையில் என்னோடு தங்கினார்கள் என்றால் சரிதான். கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் சம்பவ இடத்திலிருந்து 3 கி.மீ தொலைவில் இரண்டு காவல் நிலையங்கள் உள்ள நிலையில் எதற்காக தனியார் ஹோட்டலில் அறை எடுத்தோம் என்ற விவரம் அதசாஆ.3 மகஜர்

மற்றும் அசதாஆ.13 57 அறிக்கையில் என்னுடைய முதல் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான்.ஹோட்டல் சிவாலயாவில் Manager மற்றும் ஹோட்டல் Staff இருந்தார்கள் என்றால் சரிதான். அவர்களின் மொத்த எண்ணிக்கை என்னவென்றால் அது தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. எனது சோதனை நடவடிக்கையில் ஹோட்டல் சிவாலயாவில் வேலை பார்த்த சிப்பந்திகள் எவரையும் சாட்சியாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக கூறப்படும் இடத்தில் Shops, Restaurant நிறைய இருந்தது என்று சொன்னால் சரியல்ல. அதசாஆ.3-ல் நான் தனியார் சாட்சிகளை விசாரிக்க குவிமுச பிரிவு 100-ன்படி நடவடிக்கை எடுத்ததாக ஆவணங்களில் சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. அசதாஆ.3-ல் சொல்லப்பட்டுள்ள கையொப்பம் என்னுடையது என்றால் சரிதான். ஹோட்டல் சிவாலயாவின் முழு முகவரி என்னால் சொல்ல முடியுமா என்றால் முடியும். அது புதுக்கோட்டை பழைய பஸ் ஸ்டான்ட் அருகே உள்ள ஹோட்டல் ஆகும். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் ஹோட்டல் சிவாலயாவில் கொடுத்துள்ள வாடகை ரசீது போட்டோ காப்பியில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையதா என்றால் என்னுடையது தான். அந்த **ஆவணம் எதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எதாசஆ.1 வாடகை ரசீதில் எழுதப்பட்டுள்ள தேதி 12.04.2025 மற்றும் புக்கிங் Time 9.13p.m மற்றும் புக்கிங் ரூம்கள் 3 ரூம்கள் அறை எண்கள்.201, 202, 206 என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அது என்னால் பூர்த்தி செய்யப்படவில்லை. நான் 12.04.2025-ம் தேதி எனது டீம்வுடன் ஹோட்டல் சிவாலயாவுக்கு இரவு 9.13 p.m வந்துவிட்டேன் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக ஆவணங்களை முன்கூட்டியே

தயார் செய்து வைத்து கொண்டோம் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி விவரங்களை ஹோட்டல் சிவாலயாவின் Manager -ஐ விசாரித்தால் உண்மை தெரியும் என்று சொன்னால் சரிதான். நான் 12.04.2025-ம் தேதி இரவு ஹோட்டல் சிவாலயாவுக்கு வந்து விட்டேன் என்றும் தற்போது அதனை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாஆ.14 மற்றும் 15-ல் எந்த தேதி முதல் எந்த தேதி வரை டோல் கேட் ரிக்கார்டிங் விசாரணைக்காக தேவைப்படுகிறது என குறிப்பிட்டு விவரம் கேட்கவில்லை என்று சொன்னால் சரிதான். WP(MD) 11133/2025 High Court of Madras மதுரை கிளையில் 17.04.2025-ம் தேதி பழைய கந்தர்வக்கோட்டை டோல் பிளாசாவின் 13.04.2025-ம் தேதி 4.00 முதல் 6.00 மணிக்கிடையிலான விடியோ ரிக்கார்டிங்கை எதிரிக்கு ஒரு நகல் கொடுக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 17.04.2025-ம் தேதி உயர்நீதிமன்ற உத்தரவு பிறப்பித்த விவரம் தெரியும் என்று சொன்னால் சரியல்ல. 13.04.2025-ம் தேதி நானும் எனது டீமும் சுமார் 4.00 மணியிலிருந்து 5.30 மணியளவில் எதிரி மற்றும் தனது உறவினர்கள் நான்கு பேரை பழைய கந்தர்வக்கோட்டை டோல் பிளாசாவில் மடக்கி இந்த பொய் வழக்கை அவர் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி டோல் பிளாசாவின் வீடியோ இந்நீதிமன்றத்தில் அல்லது எதிரியிடம் கொடுத்தால் இந்த வழக்கிற்கு பாதகமாக அமையும் என்றும் அதனை மறைத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அதசாஆ.4 எதிரிக்கு வழங்கப்பட்ட சம்மனில் எத்தனை மணிக்கு விசாரணைக்கு வரவேண்டும் என்ற விவரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். 14.04.2025-ம் தேதியில் எதிரிக்கு சம்மன் சார்வு செய்த பிறகு எதிரி அவர் வீட்டுக்கு அனுப்பி

வைக்கப்பட்டார் என்று சொன்னால் சரியல்ல. எதிரி அந்த நேரத்தில் எங்கே இருந்தார் என்று குறிப்பிட்டு சொல்ல முடியுமா என்றால் முடியும். எதிரி அப்போது எங்கே இருந்தார் என்றால் சம்மன் சார்வு செய்த பிறகு விசாரணைக்காக சிவாலயா ஹோட்டலுக்கு வந்தார். சம்மன் சார்வு செய்த பிறகு எதிரி என்னுடன் இருந்தார் என்று சொன்னால் சரிதான். எதிரி என் மீது அவர் ஜெயிலிருந்து கொண்டு 25.04.2025-ம் தேதியன்று CJM புதுக்கோட்டை CM Cell மற்றும் Chief Justice Madras High Court மற்றும் Special Court for EC and NDPS Act புதுக்கோட்டை ஆகிய விலாசங்களுக்கு எங்கள் பெயரில் 13.04.2025-ம் தேதி ஒரு புகாரை ஜெயில் வழியாக கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த புகாரின் அடிப்படையில் என் மீது DSLA புதுக்கோட்டை மற்றும் CJM Court, புதுக்கோட்டை அவர்களால் விளக்கம் கேட்டு நோட்டீஸ் கொடுத்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. எதிரி தனது உறவினர்களுடன் வியாபார விஷயமாக காரைக்குடி சென்று JCP வாகனம் வாங்குவதற்காக கொண்டு சென்ற ரூ.14 லட்சம் ரொக்க தொகையை நானும் எனது டீம் உறுப்பினர்களும் எதிரியிடமிருந்து எடுத்துக் கொண்டு இந்த வழக்கின் எதிரியை காட்டில் ஓடவிட்டு சுட்டுவிடுவேன் என்று மிரட்டியும் இந்த பொய் வழக்கை எதிரி மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 14.04.2025-ம் தேதி அதிகாலை 1.40 மணியிலிருந்து காலை 9.00 மணி வரை என்னுடன் ஹோட்டல் சிவாலய அறை எண்.201-ல் இருந்தார் என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் சா.பொ.3 முதல் 5ல் கண்டுள்ள செல்போன்களை விசாரணைக்கு தடய அறிவியல் ஆய்வகத்திற்கு அனுப்ப கோரி நீதித்துறை நடுவரிடம் எந்த கோரிக்கையும் அப்போது முன் வைக்கவில்லை என்றால் சரிதான்.

Inventory, sampling மட்டுமே நீதித்துறை நடுவர் முன்பாக எடுக்கப்படும். எனது முதல் விசாரணையில் கூறியுள்ள அண்ணன் என்ற பெயரில் போதை பொருள் சம்பந்தமாக வாட்ஸ்ஆப்பில் பறிமாறி கொண்டதாக கூறப்படும் Conversation-ன் Screen shot பொறுத்து அதனை எதிரியின் போனிலிருந்து எடுத்ததற்கான இந்திய சாட்சிய சட்டப் பிரிவு 65(b)/ BSA சட்டப் பிரிவு 63(b) பிரிவின்படி சான்று பெறப்படவில்லை என்றால் சரிதான். அதேபோல் எந்த தடய அறிவியல் அறிக்கையும் அந்த Screen shot பொறுத்து இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி சா.பொ.3 முதல் 5 மற்றும் Screen shot எதிரியிடமிருந்து எடுத்தது அல்ல என்றும் இந்த நீதிமன்றத்தில் சா.பொ.5 மற்றும் 6-க்கு எந்தவொரு சாட்சிய முக்கியத்துவமும் இருக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரியிடமிருந்து மேற்சொன்ன இடம் மற்றும் தேதியில் எந்தவொரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும் இந்த வழக்கு பொய் என்று சொன்னால் சரியல்ல. நான் பதிவு செய்த 57 அறிக்கையில் அதாவது அதசாஆ.13ல் இவ்வழக்கின் எதிரி அலெக்சை தவிர வேறு எந்த நபரின் பெயரையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மேற்சொன்ன இடம் மற்றும் தேதியில் எந்தவொரு வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றும் இந்த வழக்கு பொய் என்று சொன்னால் சரியல்ல. எங்களுடன் VAO மற்றும் Village Assistant சம்பவ இடத்திற்கு வரவேயில்லை என்றும் நான் 12.04.2025-ம் தேதி முன் கூட்டியே தயார் செய்த ஆவணங்களில் ஹோட்டல் சிவாலயாவில் அறை எண்.201-ல் வைத்து அவர்களிடம் கையொப்பம் மட்டும் வாங்கினேன் என்று சொன்னால் சரியல்ல.

## மறு விசாரணை

இல்லை.

திறந்த நீதிமனறத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்குநர்

முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்கு

சொல்லப்பட்டு அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு

சாட்சியிடம் படித்துக் கட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு

சாட்சியால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது .

அத்தியாவசிய பண்டங்கள் மற்றும் போதைப் பொருள் தடுப்பு சிறப்பு நீதிமன்றம்,

புதுக்கோட்டை.